008

திந்தி

எதிர்ப்புப்பாட்டு.

OFFICE OF THE REGISTRAR
24 AUG 1938
G. O. ROOM
MADRAS

உண்மை சேவகர்

ஜஸ்டிஸ்

இந்த

அறிஞர் பலரால் இயற்றிய பாக்களை

ஒருங்கே திரட்டி, பௌத்த சங்க அங்கத்தினரில்

ஒருவராகிய தோழர்

ஆர். சிவசுவாமி உபாஸகரால்,

வெளியிடப்பட்டது.

ரெ. சேஷகிரி அய்யர் தெருவு, புதுப்பேட்டை, சென்னை.

சென்னை கெருடவாகனன் பிரெஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

1938.

விலை பை 6

வாழ்க தமிழ் ஒழிக ஹிந்தி

ஒரு வேண்டுகோள்

தாய்மார்களே! பெரியோர்களே!

வணக்கம்

இந்தி கட்டாயபாடமாகவுள்ளபட-
சாலைகளுக்குத்தங்கள்செல்வக்-
குழந்தைகளை அனுப்பி அவர்கள்
படிப்பைப்பாழாக்கவேண்டாம்
என்றுதான்தங்களைப்பணிவுடன்
கேட்டுக்கொள்கின்றேன்

தமிழன்,

கே. என். ஸ்டாலின்

இந்தி எதிர்ப்புப் பாட்டுகள்

OFFICE OF THE REGISTRAR
24 AUG 1938
MADRAS

திரு. ஆர். பி. தங்கவேலன்

விருத்தம்.

தண்டமிழ் நாட்டிலே தனித்தமிழ் மிளிர்கின்ற
தாய்ப்பாஷை யுணர வேண்டும்
தயங்காத நெஞ்சமுந் தன்மதிச் செயலுமொளிர்
தமிழாய்ப் பற்றல் வேண்டும்

பண்டமிழ்க் காவியம் பண்புறு மோவியம்
பாரிலெடுத் தோத வேண்டும்
பார்ப்பனக் குடுக்கையாம் பழிப்பினை யடக்கவே
பழிக்கொரு பழியே வேண்டும்

கண்டுமிழ்! பார்ப்பனக் காலித்தனம் பலிக்காமற்
கனின்றருஞ் ஆட்சி வேண்டும்
கனமிகு வொற்றுமை கண்டோரி யாவருங்
கலங்கிட யுக்தி வேண்டும்

எண்டவிர் மந்தியின் இந்திமொழி சந்தியில்
எல்லோரும் இகழ வேண்டும்
எழிலுறுந் தமிழ்மொழி எண்டிசையு மோங்கவே
எண்ணலுற வேண்டும் வேண்டுமே.

ஆதிபரஞ் ஜோதி யெனைப் பாராய் - என்ற இசை

பல்லவி.

இந்திமொழி வந்ததையோ நாட்டில்
மந்தியெனுஞ் சொல்லுங் கேட்டை—சேட்டை (இந்தி)

அநுபல்லவி

சந்து சந்தாக நாம் நாளும்
நொந்தே யழுகவே நேரும்
சுந்தர ஸ்டான்லியின் நோன்பைப் பாரும் (இந்தி)

சரணங்கள்

1 பாழாகவே பள்ளிதனை மூடப்
பார்ப்பனச் சூழ்ச்சியின் கேடே தானே
வாழாமல் நந்தமிழ்த் தாய்தான்
வாடி யழுகவே செய்தான்
வாளான ராஜாஜி வாதே சூதே தீதே (இந்தி)

2 பல்லாயிர மக்கள் மனம் நோகப்
பாலன் ஜெகதீசன் சாக நேர
இல்லாமல் என்செய்தான் வேறே
இழிவுதான் ராஜாஜி கூற்றே
இனியில்லாத் தொல்லைதான் பொங்கும் இங்கும் எங்கும் இ

நொண்டிச் சிந்து.

மஞ்சள் பெட்டி மகிமையைக்கேள் மக்கள்
மனம்நொந்தே இந்திவேண்டா மென்று சொன்னதால் அன்று
நெஞ்சிதனி லீர மில்லாமல் நம்மை
நெட்டித்தள்ளி லட்டிசார்ஜி பீச்சில் செய்ததே இன்று

அஞ்சோமென்று தாய்மொழி காக்க மக்கள்
அருந்தொண்டு தனைக்கண்டே ஆட்டங் கொண்டதே காங்ரஸ்
மிஞ்சியே நூற்றைந்து மக்களைப் பாவம்
மீட்காமலே சிறைதனில் கொண்டடைத்ததே ஐயோ ம

பேசுதற் குரிமை யற்றே மக்கள்
போடுகின்ற கூப்பாட்டிற்கு நீதியு மற்றே அந்தோ
ஏசுதற்கே பார்ப்பன ராஜ்யம் நம்மை
எட்டித்தாவும் மந்தியெனக் கொட்டிச் சிரிக்க நாளும்

மாசற்ற மக்களை யிழிவாய் இன்று
மந்திரியா ரறிவிலிக ளென்றே யுரைத்தார் சல்லிக்
காசுக்கே யுதவாமல் நம்மை இங்குக்
காலிகளெனக் கூலிக்குச்சொல் லேஷியே விட்டார் ஐயோ ம

[கடம்பங்குளம் ப. நாராயணன்.]

மலையேறி மோனுலென்ன என்ற மெட்டு.

பாரினிலே நாமுயர்ந்து பகுத்தறிவு பார்க்குந் தந்து
சீருஞ் சிறப்புமே சிறந்திருந்தோம் தமிழர்களாய் அன்று-உலகம்
சிரிக்கும்படி பிரிந்துவிட்டோம் இன்று

எம்மொழியிலும் சிறந்தயெழில் மொழியாந்தமிழில்
கம்பவர்கள் ஆக்கிவைத்த நயம் நூல்கள் எத்துணையோ உண்டு-இதை
நாம்பயின்று தேருவதே நன்று.

கண்ணிருந்தும்பாராார்போல் காதிருந்தும் கேளார்போல்
எண்ணிறந்த தமிழருக்கு ஏதுக்குகொண்டுவந்தார் ஹிந்தி-பார்ப்பார்
ஏமாற்றி பிழைப்பதற்கோ? பிந்தி.

வடநாட்டுத் தலைவருக்கு வாக்களித்தேனென்றுமொரு
நிடமற்ற வாதந்தன்னை செப்புகின்றாரே முதல் மந்திரி-இதை
சிந்தனைசெய் இவரே பார்ப்பனத் தந்திரி.

எந்நாடு சென்றாலும் எடுத்தோதவல்ல ஆங்கிலதனை
பொன்னனைபொதுமொழியாய்ப்போற்றுதற்கு யென்னதடை சொல்
புங்கர்களின் சூழ்ச்சிதனை வெல்லும். [லும்-இந்த

எல்லார்க்குமோர்விதமாய் எழுதாமல் இந்திப்பாடம்
சொல்லுவதேன் இரண்டு விதம் சூது இதிலிருக்குப் பாரும் - இந்தச்
சூதிலிருந்தே தமிழா தேறும்.

வல்லான் வகுத்ததுவே வாய்க்காலெனும் வழியில்
செல்லாமல் நாம் திரண்டு சீருஞ் சிறப்படையவாரும்-தமிழ்
செல்வர்களெல்லாருமொன்றாய்ச்சேரும்.

ஆந்திராவிடரும் அன்பான முஸ்லீம்களும்
சோதித் தமிழனுக்குத் தொண்டுசெய்யுநேரமிது தானே-இன்று
சும்மாயிருப்பதுவும் வீணே.

பார்ப்பனரல்லாத பாலகர்க்குப் பாலில்வளர்
தாய்ப்பாசைத் தமிழருக்குத்தடிப்பாசை வேறெதற்குச் சொல்லும்-நம்
தலைவர்களின் ஆணைவழி நில்லும்.

உத்தமர்கள் தமிழுக்குயிர் கொடுக்கும் பண்டிதர்கள்
எத்துணை பேர்களுண்டோ ஏற்றிடுவோம் சத்தியப்போர் நாமே-நம்
எதிரிகளின் சூழ்ச்சியெல்லாம் போமே

[தமிழ் தொண்டன்.

கும்மி.

கும்மியடி பெண்ணே கும்மியடி
குலகோத்திரம் ஒன்றெனக் கும்மியடி நம்மை
பாகுபடுத்திய பார்ப்பார சூழ்ச்சிகள்
பாரிலொழிந்திட கும்மியடி கும்மி

2 சாதிப்பிரிவினை யில்லையடி
சதிகாரர் பிரித்ததோர் தொல்லையடி சோதி
ஆதிவிந்து நாதம் மூலமடி
அந்த அர்ப்புதம் நம்பி விளங்குதடி கும்மி

3 நான்கு வேதங்க ளென்பாரடி
நம் நாவா லுரைப்பது பாவமாண்டி இது
நாகரீகமற்ற சட்டமடி நம்மை
நாசப்படுத்திய திட்டமடி கும்மி

4 தீட்டை ஒழித்திடா வம்பரடி
தினம் வேட்டை யடிப்பது நம்மல்டி இந்து
கோவில் புரோகித ரென்பாரடி
குலம் வேரென்று சொல்லி திரிவாரடி கும்மி

5 ஆரியராச்சி வளர்ப்பாரடி
அகில காங்கிரஸில் சேரென்று சொல்வாரடி ராம
ராச்சியம் வந்ததென்று வில்வாரடி
ராச்சத கூட்டத்தை ஒழிப்போ மென்பாரடி கும்மி

6 ஹிந்தி கட்டாயம் மென்பாரடி
ஹிந்து தமிழ்மக்களைக்கண்டு வெறுப்பாரடி சர்வம்
சமஸ்கிருதம் மென்பாரடி
சாஸ்திரி ஆச்சாரி அய்யரடி கும்மி

7 தமிழரொன்றாய் கூடவேண்டுமடி
தமிழ்பாஷை வளர்த்திட வேண்டுமடி
தமிழ்நாட்டைப் பிரித்துநாம் கேட்போமடி
தமிழோங்கிட தொண்டு புரிவோமடி கும்மி

தமிழ் மகன்.

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்ற மெட்டு.

என்ன சூழ்ச்சி! என்ன மாயம்! என்ன பாவமோ விதற்
கென்ன செய்யப் போகிறீர்கள் எங்கள் சிங்கத் தமிழர்காள்!

1 கள்ளமில்லை கபடமில்லை கண்ணெதிரி ல் நிற்கையை
உள்ளத்தோடு மாரியர்கள் உறுதியாக நாட்டினில்
மெள்ளவே வல் மாயமாக நாட்டிடவும் வந்துளார்
தள்ளிடவும் ஐயகோ! நந் தமிழினையும் பார்க்கிறார்!

2 நின்றழிந் தொழிந்துபோன நீடிலாத மொழியையும்
இன்று ஹிந்தி யென்று கொண்டே மாற்றுற தன்றியும்
பண்டு தொட்டு இன்றுகாறும் விண்டிலாத தமிழையும்
கண்டிலா தழைப்பு மின்றிப் பொதுமொழியா மென்கிறார்!

3 மதிவளர்ச்சி நூலவளர்ச்சி பேர்வளர்ச்சி யாகிய
நிதிவளர்ச்சி யில்லையென்றால் பொதுவளர்ச்சி எய்துமோ!
கதியிலாத பார்ப்பணர்கள் காட்டுக்கறுப்புச் சூழ்ச்சியைப்
புதைப்பதோ சிதைப்பதோ வோர் புதுமொழியைப் புகுப்பதோ!

4 வீங்கு புகழ் வள்ளுவனே யீன்றதுமெந் தாய்மொழி
ஆங்கிலேய அறிஞர் பல்லோரளந்துரைத்த தமிழ்மொழி
ஈங்கதனை யொத்திடுமென் றிந்தியை இயம்புதல்
வாய்ந்திடுவ தென்பவர்கள் வாய்பிளந் திறுத்திடும்.

5 சொந்தமாக எழுத்துமில்லை சொல்லுமில்லாச் சிறுமொழி
அந்தமாகப் பொருளுமில்லை ஒன்றுமில்லை வெறு மொழி
அந்த மொழி எந்தமொழி ஹிந்திமொழி யென்பவே
செந்தமிழ்மூன் னின்றிடுமோ இந்த ஏழை ஹிந்தியே!

6 செல்லரிக்க தீயரிக்க சேர்ந்து வெள்ள மழிந்திட
வல்லவட வாரியர்வன் கண்மையோ டெதிர்த்திட
வெல்லவல்ல தமிழ்மெ ழியை மெல்ல மெல்ல மணக்கவே
வல்லிவந்த ஹிந்தியே! சாலநல்லை நல்லையே!

7 உலகமெல்லா முலவிவரும் ஒருமொழியை யறிவையோ
பலபொருளி னம்மொழிய ஒருபொருளி னொப்பையோ!
செலவிலை! நீ இன்று செல்க! நாளைவரின் பொன்றவை
பலகலைகள் கற்றிலைநீ படர்ந்தவழி பார்த்திடு.

8 சிறுவர்களைச் சிதைக்கவரும் அருளிலாத சிறுமொழி
உறுவலியும் அறிந்திலே பூரிவாங்கும் பார்ப்பனர்
வெறுமொழியா லிரப்பதுபோல் பிச்சைபெற்றுப் சொற்களைப்
பெறுமினத்தால் திரிபறிவு பெற்றிடுதல் இயல்புதான்.

9 கொஞ்சுகின்ற ஹிந்திமொழி கொடியநஞ்சு மாகுமாவ்
விஞ்சுகின்ற அஃதுணர்ந்த வீரர்காள்! நற்புலவர்காள்!
மூஞ்சி யுடைப் பார்ப்பனர்கள் நெஞ்சமாகு மதனையே
தஞ்சமாக்கி எண்டிசையும் தமிழ்க்கொடியை ஏற்றுவீர்!

10 அந்த ஹிந்தி யையொழிக்க ஆனதெல்லாஞ் செய்குவீர்
வந்த வந்த வழியிலெல்லாம் வாய்மெழியால் கொல்லுவீர்!
மூன்தைவாகை சூடி தமிழ் வாழி! ஊழி வாழி! யென்
றந்தமாகக் காமறைந்து மார்ப்பரித்தும் வாழுவீர்!

குடியேற்றம் மு அண்ணல் தங்கோ

ஜெய பேரிகை கொட்டடா எ. இ. பா.

பல்லவி.

1 ஹிந்தி ஏனையா! எமக்கு? எமக்கு? ஹிந்தி

பல்லவி மகுடம்.

2 தாய்த்தமிழ் எழுத்தறிவோ! பெற்றிலாதவர்களுக்கு ஹிந்தி

சரணங்கள்.

3 மந்திராலோசனை புரிந்தீர்!—வஞ்ச
மனுதர்மக் குழுவோடு கலந்தீர்!
தந்திரமாய்ப் பொது மொழிவழி கூறித்
தமிழைத்தொலைக்க முனைந்தீர்! முனைந்தீர்!! ஹிந்தி

4 ஹிந்திக்கு இலக்கியம் உண்டா?—அது
எழுந்தது மேற்கு? பண்டா?
இந்தியா முழுவதும் பேசுதல் உருதன்றி
இடருள்ள ஹிந்திமொழி யல்லவே? சொல்லும் ஹிந்தி

5 காங்கரஸ் என்னும்பேர் இங்கிலீஷ்!—அதைக்
காத்து வளர்த்த தெல்லாம் இங்கிலீஷ்!!
ஆங்கிலத் துணைகொண்டு அறிந்தோம் பலகலைகள்!!!
ஆரிய! நன்றியில்லாக் காரியம் செய்தீர்! இந்தி

6 பொது மொழி வாதம்பேசும் புலவீர்!—துளசீ இப்
புனை கதையை எனிதில் நுழைப்பீர்?
மதியாருமது முன்னோர் வளர்த்தும்-உயிரீழந்த
வடமொழி கற்க வாத மிடுதலெதற்கு? ஹிந்தி

7 தொடக்கக் கல்வியே இங்கில்லாது—மக்கள்
தொழும்பாய்க் கிடக்கின்ற போது!
தடுக்குத் தனமா யிந்தி துரைத்தனமொழியென்று
தொல்லை விளைப்பதெல்லாம் நல்லதல்ல !! ஹிந்தி

8 வளமற்ற ஹிந்திமொழி பயின்று—சற்று
வருந்தமி ழாங்கிலங்கெட் டுழன்று!
அளப்பருங் காலம்வரை யறிவின்றிக் கொடிபிடித்
தடிமையாய்த் தமிழர்களைக் கிடக்கப்பண்ணீர்!! ஹிந்தி

9 வடக்கே கட்டாயப்பாட மேது?—அதை
வங்காளிகள் எதிர்க்கும்போது?
மடத்தமிழர்களென்று மதித்துக் கட்டாயபாட
மாகக் முயற்சிப்பது யோக்கியதையல்ல. ஹிந்தி

10 தேர்தல்காலத்தில் வந்த பணிவும்—சில
தின அதிகாரம்! செய்யுந்துணிவும்..
யாருங் கருதாரென்று இறுமாப்புடனே நின்று
ஹிந்திவைப்பீராஞல் காங்கரஸ் மந்திரிசபை போம்!!! ஹிந்தி

வித்வான் சி. எஸ். சிவம்.

வீர சுதந்தரம் வேண்டிநின்றூர் என்ற பாரதியார்

1 சுதந்தரம்வேண்டியே வேட்கை கொண்டார் தங்கள்
சுதந்தரம் இழப்பாரோ? என்றும்
இதந்தரும் மொழியிந்தி என்றுதாய் மொழிக்கொலைக்
கேவுதல் இழிவன்றே?

2 ஆய்தமிழ் அன்னியர் ஆட்சியால் மாய்ந்திட
அயல்மொழிக் காக்கமேனே? சொந்தத்
தாய்பசித் தழுதிடத் தரணியோர்க் கறுசுவை
தாமிடல் அழகாமோ?

3 வயிற்றினில் கட்டிக்கு மண்டையில் பூசினுல்
வந்தநோய் குணமாகுமோ? வெறும்
கயிற்றினில் பாம்புபோல் கண்டொன்று மிரண்டிடில்
காரியம் நிறைவாமோ?

வண்டிய செயயாமல் வேறொன்று செய்திட்டால்
வீண்வம்பென் றேசாறே? சொந்தக்
காங்கரசால் பலன் கண்டிட எண்ணினேனோ
கணவில் களித்தாறே?

பாரதிதாசன்

ஸ்ரீசிவ சண்முக வேலனே என்ற மெட்டு.

இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமாம்—நீங்கள்
எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!
செந்தமிழ்க்குத் தீமை வந்தபின்னும்—இந்தத்
தேகமிருந்தொரு லாபமுண்டோ? இந்

விந்தைத் தமிழ்மொழி எங்கள்மொழி—அது
வீரத் தமிழ்மக்கள் ஆவி என்போம்.
இந்திக்குச் சலுகை தந்திடுவார்—அந்த
ஈனரைக் காறி யுமிழ்ந்திடுவோம் இந்

இப்புவி தோன்றிய நாள்முதலாய்—எங்கள்
இன்பத் தமிழ்மொழி உண்டு கண்டீர்.
தப்பிழைத் தாரிங்கு வாழ்ந்ததில்லை--இந்தத்
தாந்தோன்றி கட்கென்ன ஆணவமோ? இந்

எப்பக்கம் வந்து புகுந்துவிடும்?—இந்தி
எத்தனை பட்டாளம் கூட்டிவரும்?
அறபமென்போம் அந்த இந்திதனை—அதன்
ஆதிக்கந் தன்னைப் புதைத்திடுவோம் இந்

எங்கள் உடல் பொருள் ஆவியெலாம்—எங்கள்
இன்பத் தமிழ்மொழிக் கே தருவோம்!
மங்கை ஒருத்தி தரும் சுகமும்—எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்! இந்

சிங்கமென்ற இளங் காளைகளே...மிகத்
தீவிரங் கொள்ளுவீர் நாட்டினிலே.
பங்கம் விளைத்திடில் தாய்மொழிக்கே--உடற்
பச்சை ரத்தம் பரி மாறிடுவோம்! இந்

தூங்குதல் போன்றது சாக்காடு—பின்னர்த்
தூங்கி விழிப்பது நம் பிறப்புத்
தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம்--உயிர்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை! இந்

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை = நமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!
எங்களிடோம் தமிழ்த் தாய்தனையே...உயிர்
இவ்வுடலை விட்டு நீங்கும் வரை! இ

கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு என்ற மெட்டு

செந்ததுழைக் காப்பதற்குச் சேனை ஒன்று தேவை பெருஞ் சேனை ஒன்று தேவை
திரள் திரளாய் சேர்ந்திடுவீர் புரிவம் நல்ல சேவை

பைந்தமிழை மாய்ப்பதற்கே பகை மூளைத்த திங்கே கொடும் பகை மூளைத்த திங்கே
பாதகரை விட்டுவைத்தால் தமிழர் திறம் எங்கே?

இந்தியினைத் தமிழரிடம் ஏன் புகுத்த வேண்டும்? இவர் ஏன் புகுத்த வேண்டும்?
எப்முயிரில் நஞ்சுதனை ஏன் கலக்க வேண்டுப?

சந்தத் தமிழ்மொழி யழிந்தால் தமிழர் நிலை விரசம் நல்ல தமிழர் நிலை விரசம்
தமிழர் திறம் காட்டிடுவோம் முழக்கிடுவீர் முரசும்!

உளமை என நுனைத்துவிட்டார் ஊர் நடத்த வந்தோம் நமை ஊர் நடத்த வந்தோம்
உளறுகின்றார், பொருளரியார் சிறுசெயல் புரிந்தோர்

தாய்மொழிக்குத் தீமை செய்தார் சயமடைந்த துண்டோ? இங்குச் சயமடைந்த துண்டோ?
தன் மொழியை விலக்கியதோர் சமுகமெங்கே கண்டார்?

நாமும் உயிர்வாழ்வதுண்டோ நம் தமிழைப் பிரிந்தும் இங்கு நம் தமிழைப் பிரிந்தும்.
நம் தமிழை ஈடழிக்க இந்திவரத் தெரிந்தும்

போய் மறைவாய் இந்தி என்று புகலுகின்றோரும் இங்கே நாம் புகலுகின்றோரும் இங்கே
புக நினைத்தால் அறிவை என்று முழக்கிடுவோம் சங்கே!

தூரிகையும் எழுதுகோலும் தூய் தமிழர் நாவும் மிகுதூய் தமிழர் நாவும்
தொட்டியற்றும் அச்சுச்சாலை மற்றுமுள்ள யாவும்.

ஓரிடத்தும் தொடுவதுண்டோ இந்தியிலோர் எழுத்தை அந்த இந்தியிலோர் எழுத்தை
உயர்தமிழன் பகையதுவாம் அறுக்கவேண்டும் கழுத்தை!
காரிகைகள் குழந்தைகள் நம்கனமறிந்த கிழவர் நல்ல கனமறிந்த கிழவர்.
கைத்தொழிலா ளர்வணிகர் கடல் நிகர்ந்த உழவர்
பேரினை முழக்கிடுவீர் இந்தி எதிர்ப்பீரே
பேணவரும் தமிழர்களின் ஆணை எண்ணுவீரே!

வித்வான். சி ஏஸ். சிவம்

வந்தே மாதரம் என்போம் எனற பாரதியார் பாடல் மெட்டு.

1 ஹிந்தி மொழிநமக் கேனே? அது
இந்திய நாடெங்கும் பாய்ந்திடத் தேனே?
மூன்றியே ஆரியம் மாள அதை
ஹிந்திப் புரட்டினில் எழுப்புவீர் மீள

2 வேதம் புராணமுன் டென்பார் கதை
மேலாகக் கற்றிட லாமிதில் என்பார்
மேதினி மேலெல்லா வாழ்வும் இன்ப
வீடுமே பெற்றுய்ய வழியிதே என்பார் ஹிந்தி

3 சாத்திரம் சமயங்கள் எல்லாம் இங்குச்
சாதித்த தைக்கொஞ்சம் சாற்றுவீர் நீரே
கோத்திரம் குலம்சாதி எல்லாம் பல
கோடிகள் ஆகிநாம் கொண்டது போரே ஹிந்தி

4 ஒருமொழி யாலொன்று பாடு நமக்
குண்டென் றுரைப்பவர் உறவே ஓர் கேடு
அருந் தமிழ் காட்டினில் சாதி பல
ஆயிர மாயிரம் சொல்லுமே நீதி ஹிந்தி